முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் பாம்பாட்டிச்சித்தர் அருளிய ஒளி சூட்சும நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

04.10.2018, வியாழக்கிழமை

1. **காப்பாய் கனகவேலே என்று**
**கலியுகத்தார் வேண்டி வருக**
**காப்பாய் ஆறுமுக அரங்கன் நீ**
**கருணை கொண்டு துணையாய் நிற்க**

2. நிற்கவே உலகோர் துன்பம் விலகும்
நிலவுலகே பாதுகாப்பு பெறும்
அற்புதம்பட அவதாரம் புரிந்த
அரங்கனே உன் பெருமை கூறி

3. கூறியே ஒளி சூட்சும நூலை
குவலயத்தில் **விளம்பி தரிவை திங்கள்**
**தெரியவே மூவாறுதிகதி குருவாரம்**
**(விளம்பி வருடம் புரட்டாசி மாதம் 18ம் நாள் 04.10.2018, வியாழக்கிழமை)**
**தேசிகனுக்கு பாம்பாட்டிச்சித்தர் யானும்**

4. யானும் உலகோர் நலமுற உரைப்பேன்
உயர்வான ஞான உலகமைக்க
ஞானவழி காட்டி அருளுகின்ற
ஞானிகள் பூசை உலகோர் கலந்துவர

5. வருகவே நல்லதே நடக்கும்
வருகவே முன்னேற்றம் காணும்
முருகா எனும் செபதபம் பெருக
முழுமைபட மக்களிடையே மாற்றம்

6. மாற்றம் தன்னலம் நீக்கியே
மண்ணுலகில் பொதுநல உணர்வும்
ஆற்றல் பெருக்கமும் கண்டு
ஆசை பேராசை விலகும்

7. விலகிட தயவு எனும் உயரிய
வினை வெல்லும் ஜீவகாருண்யம்
காலமதில் எல்லோரிடையும் பரவி
கலியுகம் ஞானயுகம் ஆகும்

8. ஆகவே அரங்கனே தலைவன்
ஆறுமுகனே சக்தியாக வந்துள்ள
யுகமாற்றம் செய்ய வந்த ஞானி
ஓங்கார குடிலாசான் பெருமை

9. பெருமை அறிந்த மக்களுக்கு
பிறவி என்பது இனி இல்லை
தருமமாம் அரங்கன் சக்தி
தவசித்தியின் உயர் சேவையை

10. சேவையை அறிந்தோர் கலந்தோர்
செயல்பாடென தொண்டு புரிவோர்
அவணியில் இவர்கள் எல்லாம்
ஆறுமுகன் அருளுக்கும் ஆசிக்கும்

11. ஆசிக்கும் தகுதி பெறுவர்
அழியாமை என்கிற பெருஞானம்
ஆசிபட அடைந்து உயர்வர்
அறிவித்த ஒளி சூட்சும நூல் முற்றே.

–சுபம்–

## முருகப்பெருமான் துணை

**மகான் பாம்பாட்டிச்சித்தர் அருளிய ஒளி சூட்சும நூலின் சாரம் :**

கனகவேலா, முருகா காப்பாய் அப்பா என்று கலியுகத்தினர் முருகப்பெருமானை மனம் உருகி வேண்டி வருகின்றனர். முருகனை வணங்கிடும் அவர்களையெல்லாம் காத்து ரட்சிக்கின்ற ஆறுமுக அரங்கமகா தேசிகனே தாம் அன்பர்களுக்கு அளவிலாத கருணை கொண்டு துணையாய் நிற்கின்றாய். உமது கருணையால் உலக மக்களின் துன்பம் விலகிடுமப்பா. இவ்வுலகம் முழுதும் உமது அருளால் பாதுகாப்பு பெற்றிடுமப்பா. அற்புதம்மிக்க அவதாரம் புரிந்த ஆறுமுக அரங்கனே உமது புகழை உலகறியக் கூறியே உலக நலம் கருதி **விளம்பி வருடம் புரட்டாசி மாதம் 18ம் நாள் 04.10.2018, வியாழக்கிழமையான** இன்றைய தினமதனிலே ஒளி சூட்சும நூல்தனையே பாம்பாட்டிச்சித்தர் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் பாம்பாட்டிச்சித்தர்.

இவ்வுலகினில் கலியுகம் மாற்றி ஞானயுகம் அமைத்திட அற்புதம்மிக்க ஞானபூசைகளை அருளி உலகோர் கடைத்தேறிட உபதேசிக்கின்றார் ஆறுமுக அரங்கமகா தேசிகன். உலக நலம் கருதி யுகமாற்றம் கருதி அரங்கன் நடத்துகின்ற இந்தவித ஞான பூஜைகளிலே உலக மக்கள் கலந்து ஞானிகள் அருளாசி பெற்றிட எல்லா நலமும் வளமும் பெற்று வாழ்வார்கள். தொடர்ந்து ஞான பூஜைகளில் கலந்து கொண்டு வருவதுடன் ஞானபூசைகளை செய்து வரவர இந்த உலகம் முன்னேற்றம் அடைந்திடும்.

முருகா, முருகா, முருகா என மக்களெல்லாம் முருகப்பெருமானின் நாமங்களை நாமஜெபங்களாக செபித்து வரவர, முழுமையான மாற்றங்களை மக்கள் அடைந்திடுவர். தன்னலம் நீங்கிடப் பெற்று பொது நல உணர்வு மக்களிடையே பெருகிடும், ஆற்றலும் பெருகிடும். ஆசைகளும் பேராசைகளும் மக்களிடமிருந்து விலகிடும். மக்களிடையே தயவு என்கிற வினைகளை வெல்லும் சக்திமிக்க ஜீவதயவு உலக மக்களிடையே பரவி கலியுகம் ஞானயுகமாக ஆகிடும்.

உத்தம மகா ஞானி ஆறுமுக அரங்கமகா தேசிகனே ஞானத்தலைவன் ஆவார். முருகப்பெருமானின் சக்தியாக வந்துதித்துள்ள அரங்கமகா தேசிகனே யுகமாற்றம் செய்ய வந்திட்ட மகா ஞானி ஆவார். ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கனின் பெருமைகளை அறிந்திட்ட மக்களுக்கு பிறவி என்பது அவர்களுக்கு இனி வாராது.

தருமமாம் ஆறுமுக அரங்கனின் தர்மசக்தியின் தவசித்தியின் உயர் சேவையை அறிந்தவர்களும் அரங்கனின் தானதருமப் பணிகளில் தொண்டுகள் செய்வோர் என இவர்கள் எல்லோரும் முருகப்பெருமானின் அருளிற்கும் ஆசிக்கும் தகுதி பெற்றிடுவார்கள். அழிவிலாமை எனும் பெருஞானம்தனை முருகப்பெருமானின் அருளாசிகளின் மூலம் பெற்று உயர்வடைவார்கள் என தமது ஒளி சூட்சும நூலின் மூலம் உலகறிய உரைக்கின்றார் மகான் பாம்பாட்டிச்சித்தர்.

–சுபம்–